**பொல்கஹவெல பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூன் 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2020 யூலை 22 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பொல்கஹவெல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1 ஏக்கர் 6 பேர்ச் உடனான வீரம்புகெதர செனட் பிரஜ்வத்த காணியை கையேற்கும் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 224,900 நொத்தாரிஸ் கட்டணங்கள் மூலதனாக்கப்பட்டிருக்க வில்லை. | நொத்தாரிஸ் கட்டணங்கள் காணியின் பெறுமதிக்கு மூலதனாக்கப்பட வேண்டும். | இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரூபா 2,030,195 பெறுமதியான பொதுஹர நாபருவாகந்த காணியின் பெறுமதி இரண்டு தடவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 420,000 தொகையான 06 காணிகள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | ரூபா 16,380,000 பெறுமதியான பெக்கோ லோடரின் பெறுமதி ரூபா 1,600,380 எனக் கணக்கீடு செய்யப்பட்டமையால் மோட்டார் வண்டில்களின் பெறுமதி ரூபா 14,779,620 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இதனைச் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | ஓய்வூதிய பணிப்பாளரருக்கு ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா 8,136,370 ஆக இருந்த போதும் அது இறுதி கணக்குகளில் ரூபா 8,095,047 வை காண்பிக்கப்படாமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 41,323 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கணக்கு வைக்கும் போது இடம்பெற்றுள்ள தவறொன்றால் அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஊ) | மீளாய்வாண்டில் சம்பள மீள்நிரப்பல் பட்டியலிடல் தொகை ரூபா 86,930,475 ஆக இருந்த போதும் அது இறுதிக் கணக்குகளில் ரூபா 77,919,492 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டின் போது உள்ளராட்சி மன்றத் திணைக்களத்தின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் சம்பளம் மீள்நிரப்பப்படாத தொகை கணக்கீடு செய்யும் போதுஇடம்பெற்ற தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |
| (எ) | நிதிக்கூற்றுக்களில் ஒரு கணக்கு விடயமொன்றுக்குரிய மீதிகள் மற்றும் அதற்குரிய அட்டவணைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 884,154 ஆன இணக்கமின்மை காணப்பட்டது | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கை சீராக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்குகளுக்கு தகவல்கள் வழங்கும் போது இடம்பெற்றிருந்த தவறொன்றாக இருந்ததால் தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ஏ) | நிதிக்கூற்றுக்கள் மற்றும் இருப்பு கணிப்பீட்டு அறிக்கைளின் பிரகாரம் | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு | அதனை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன |

| | | | |
|---|---|---|---|
| | நிலையான சொத்துக்களில் ரூபா 1,448,750 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | கணக்கை சீராக்க செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |
| (ஐ) | ரூபா 81,968,032 ஆன 7 கணக்கு விடயங்களுக்காக பதிவேடுகள் மற்றும் விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்களுடன் உரிய அட்டவணைகள் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | |
| பிரிவு 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் ஆதனங்கள் கணிப்பீட்டை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க எடுக்கப்பட வேண்டும். | இதன் பின்னர் கணிப்பீட்டு சபை யொன்று நியமனம் செய்யப்பட்டு மேற்கொள்வதாக தயவுடன் அறிய தருகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,851,967 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 24,467,415 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| i. வீதவரியும் வரியும் | 11,776 | 12,644 | 11,485 | 10,854 | 11,021 | 11,021 | 5,795 | 9,695 |
| ii. வாடகை | 9,713 | 8,876 | 8,781 | 4,296 | 8,819 | 8,819 | 9,907 | 4,201 |
| iii. அனுமதிப்பத்திரகட்டணங்கள் | 701 | 1,061 | 1,061 | - | 651 | 396 | 867 | - |
| iv. ஏனைய வருமானம் | 17,500 | 209,257 | 169,790 | 80,728 | 18,630 | 18,630 | 45,487 | 41,261 |
| மொத்தம் | **39,690** | **231,838** | **191,117** | **95,878** | **39,121** | **38,866** | **62,056** | **55,157** |

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 9,694,651 ஆன வீத வரி நிலுவையில் தொகையான திசெம்பர் 31 ஆந் திகதி வரை மேலும் அறவிடுவதற்குரியதாக காணப்பட்ட நிலுவை ரூபா 6,749,715 ஆக காணப்பட்டது. | முன்னைய ஆண்டிற்காக மேலும் அறவிடுவதற்குள்ள நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலததில் ஆதனத் தடைகள் நிகழ்ச்சி மற்றும் நிலுவை வருமான சேகரிப்பு நிகழச்சிகளை செயற்படுத்தி நிலுவைத் தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தவறுடன் அறிய தருகின்றேன். |

### 2.2.3. வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நீண்டகாலமாக இருந்துவரும் 06 சொத்து பிரிவுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 369,200 அறவிடுவதற்கு காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவை தொகையை அறவிடுவது தொடர்பாக வருமான பரிசோகர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பொது வியாபார சந்தையில் பழைய கடைகள் அகறற்றப்பட்ட சந்தர்ப்பங்களில் காணப்பட்ட ரூபா 1,116,962 ஆன நிலுவை மீதிகளில் ரூபா 972,012 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவை தொகையை அறவிடுவது தொடர்பாக வருமான பரிசோகர்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |

### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1986 ஆம் ஆண்டிலிருந்து வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 8 மாதிரி வீடுகள் மிகவும் சிறிய மாத வாடகை அறவிடப்பட்டு வந்தது. | புதிய மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் வீட்டு வாடகை அறவிடப்பட வேண்டும். | நில வாடகையை மதிப்பீடு செய்வதற்கு பொதுச் சபையின் இணக்கத்தைப் பெற்று 2020 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் புதிய மதிப்பீடு கிடைத்ததன் பின்னர் அதன் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்திடுவதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருட வருட காலத்தை விஞ்சிய ரூபா 5,130,322 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது. | நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டும். | 01 வருட காலத்தை விஞ்சிய ரூபா 5,130,322 அறவிடப்பட வேண்டிய ஆன கணக்குகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ஒரு வருட வருட காலத்தை விஞ்சிய ரூபா 2,076,327 ஆன மீதிகள் அதில் உள்ளடங்கியுள்ளது. | தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒராண்டிற்கு மேற்பட்ட ரூபா 2,076,527 ஆன செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவி யணியினரில் மூன்றாம் நிலையில் 02 வெற்றிடங்களும், இரண்டாம் தர நிலையில் 11 வெற்றிடங்களும் ஆரம்ப நிலை தரத்தில் 19 வெற்றிடங்களும் 06 பதவிகளுக்கு 29 அமைய ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | வெற்றிடங்களுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் மிகைப் பதவியணியினரை முறைப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்திற்குட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சேவையை விட்டுசசென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 37,032 ஆன கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கடன் தொடர்பாக குறித்த உத்தியோகத்தருக்கு தொடர்ந்தும் அறிவிப்புக் கடிதம் மற்றும் இறுதி அறவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் அவர் பகுதி பகுதியாக கொடுப்பனவு செய்வதாக கடிதமொன்றை அனுப்பியுள்ளார். எனினும் இதுவரை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வில்லை. |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாதாந்தம ரூபா 3,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த பஸ் நிறுத்துமிட 30 ஆம் இலக்க கடை குத்தகையாளரால் குத்கையாளரால் வேறொரு நபருக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் 2019/02(01) இன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் உடமை கொண்டுள்ள 12 சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சில சொத்துக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையிடம் காணப்படுவதுடன் ஏனைய சொத்துக்களை எதிர்காலத்தில் சட்டரீதியாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும். |